பாரதிய ஜனதா கட்சி – தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2435 9600, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

Dr. தமிழிசை சௌந்தரராஜன் தேதி : 06-04-2019
மாநில தலைவர்

*பத்திரிக்கை செய்தி*

**ஸ்தாபன தினம்**

பாரதிய ஜனதா கட்சி என்ற கற்பகவிருட்சம் துவங்கி 39 ஆண்டுகள் ஆகிறது. 39 வருடங்களுக்கும் முன்னால் நாட்டின் நலத்தை முன்னிறுத்தி, சுயநலம் துறந்து, இத்தேசத்தின் நலனே பெரிது என்று கருதிய புனித உள்ளங்களால் துவங்கப்பட்ட இக்கட்சி இன்று வரை அவர்களின் பாதையில் , அவர்கள் வகுத்துத் தந்த கொள்கைகளிலிருந்து வழுவாமல், இன்று உலகின் மிகப் பெரிய கட்சியாக, 11 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ள கட்சியாக, தேசப்பற்று உள்ள எந்த குடிமகனும் உயர் பதவி வகிக்க முடியும் என்று நம்பிக்கை ஊட்டும் கட்சியாக, இன்று அகிலமே மதிக்கும் பிரதமரை கொண்ட கட்சியாக உருவெடுத்துள்ளது.

குடும்பத்தால் நடத்தப்படாமல், தொண்டர்களால் நடத்தப்படும் கட்சி என்ற பெருமைக்குரிய கட்சி பா.ஜ.க மட்டும் தான், இந்த கட்சியை இந்த அளவிற்கு உயர்த்த, பெருமை சேர்க்க இரவு பகல் பாராது, தேசத்தை முன்னிறுத்தி உழைத்துக்கொண்டிருக்கும் நம் கட்சியின் சகோதர, சகோதரிகளுக்கு ஸ்தாபன தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரத தேசம் வல்லரசாக, உலகிற்கே வழிகாட்டியாக மீண்டும் உருவெடுக்க உறுதி பூண்டு , தேசப்பணியை தொடர்ந்து செய்வோம். நல்வாழ்த்துக்கள் !.

என்றும் மக்கள் பணியில்

தமிழிசை சௌந்தரராஜன்

(Dr. தமிழிசை சௌந்தரராஜன்)